DINAMALAR

PAGE NO: 09

DATE: 04.11.2023




■ புதுச்சேரி பல்கலைக்கழக கணினி அறிவியல் துறை சார்பில் நடந்த விழாவில், துணைவேந்தர் குர்மீத்சிங் பேசினார்.

# நாட்டின் வளர்ச்சிக்கு மாணவர்களின் பங்களிப்பு

## துணைவேந்தர் வலியுறுத்தல்

**புதுச்சேரி, நவ. 4–**

புதுச்சேரி பல்கலைக்கழக கணினி அறிவியல் துறை சார்பில், புதிய மாணவர்களுக்கு வரவேற்பு விழா நடந்தது.

துறைத் தலைவர் ஜெயக்குமார் வரவேற்றார். பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பள்ளி டீன் சிவசத்யா, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பிரிவு இயக்குநர் ஜோசப் செல்வின் முன்னிலை வகித்தனர்.

துணை வேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கி பேசுகையில், 'தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பதில் இளம் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும். வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், அவற்றை பயன்படுத்தும் திறன்களை, மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்' என குறிப்பிட்டார்.

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தின் ஏ.ஐ.பி.யின் உலகளாவிய தலைவர் சுசீந்திரன், உள்நாட்டிலேயே சைபர் பாதுகாப்புத் தீர்வுகளை உருவாக்க வேண்டிய தன் அவசியம் பற்றி பேசினார். இணை பேராசிரியர் சுனிதா நன்றி கூறினார்.

DINAMANI

PAGE NO: 02 DATE: 04.11.2023

# புதுவை மத்திய பல்கலை.யில் ஆராய்ச்சி மாணவர் மன்றம் தொடக்கம்

**புதுச்சேரி, நவ. 3:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவர் மன்றம் தொடக்கம் உள்ளிட்ட முப்பெரும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் துறை சார்பில் முதலாமாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு, கணினி அறிவியல் துறை தொழில் நிறுவன இடைமுக அமைப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர் மன்றம் தொடக்கம் ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கணினி அறிவியல் துறைத் தலைவர் வி.ஜெயக்குமார் விழா தொடங்கிவைத்தார்.

பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவின் முதன்மையர் எஸ்.சிவசத்யா பாராட்டுரை வழங்கினார். ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு இயக்குநர் ஜோசப் செல்வின் ஆய்வு மாணவர்களுக்கான ஊக்கவுரையாற்றினார்.

விழாவில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமையுரையாற்றினார்.




புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி மாணவர் மன்றத் தொடக்க விழாவில் பேசுகிறார் துணைவேந்தர் குர்மீத்சிங்.

அவர் பேசுகையில், நாட்டின் வளர்ச்சிக்கான புதிய கண்டுபிடிப்புகளில் இளைஞர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

டாடா கன்சல்டன்சி சேவை நிறுவன ஏஐபி பிரிவின் உலகளாவிய தலைவர் கே.எம்.சுசீந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உள்நாட்டுப் பாதுகாப்புக்கான தீர்வுகள் குறித்து விளக்கினார்.

இங்கிலாந்து நிறுவன தொழில்நுட்ப தலைமை அதிகாரி ஜவஹர் கோவிந்தராஜ், வி.ஐ.டி. தொழில் மைய இயக்குநர் சாமுவேல் ராஜ்குமார், சாய்ராம் குழுமக் கல்வி நிறுவன பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறைத் தலைவர் எல். அருணாசலம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

கணினி அறிவியல் துறை இணைப் பேராசிரியை சுனிதா நன்றி கூறினார்.